
## ஏதாகிலும் செய்யக்கூடுமானால்



“அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளி, பல்லைக்கடித்து, சோர்ந்துபோகிறான். அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன்; அவர்களால் கூடாமற்போயிற்று என்றான். அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார். அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயதுமுதற்கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப்

**புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான். இயேசு அவன் கையைப்பிடித்து, அவனைத் தூக்கினார்; உடனே அவன் எழுந்திருந்தான்." (மாற்கு 9:17-27)**

மேற்கண்ட சம்பவத்தில் ஆண்டவர் மறுரூபமலையில் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானுக்கு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தி, அம்மலையில் இருந்து இறங்கி வந்த உடனே நடந்தவையாகும். ஆண்டவர் மற்ற அப்போஸ்தலர்களோடு இல்லாத நேரத்தில், அவர்கள் இந்த வாலிபனுக்குள் இருந்த அசுத்த ஆவியை துரத்த முயன்றும் அவர்களால் கூடாமல் போயிற்று. இதற்கான காரணத்தை ஆண்டவரே அவர்களுக்கு பின்னர் வெளிப்படுத்தினார். ஆனால் இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய வார்த்தை என்னவெனில், அந்த வாலிபனுடைய தகப்பன் கூறிய **"நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்" (மாற்கு 9:22)** என்பதாகும். ஒருவேளை அந்த தகப்பன் ஆண்டவருடைய மறுரூப மலையின் அனுபவத்தை பெற்றிருப்பானாகில் இப்படி கூறியிருக்க மாட்டான். ஆனால் அவனோ ஆண்டவர் ஏதாவது செய்வார், என் மகனுக்கு விடுதலை தருவார் என்ற நம்பிக்கையோடு வந்து, அவர் இல்லாத காரணத்தினால் அவரது சீஷர்களான அப்போஸ்தலர்களிடத்தில் தன் மகனைக் கொண்டு வந்து விட்டபொழுதும், விடுதலை கிடைக்காத காரணத்தினால், சோர்வோடும், வேதனையோடும், அதே நேரத்தில் அந்த இடத்தை விட்டுச் செல்லாமல், ஆண்டவர் மலையில் இருந்து இறங்கி வரும் வரை அவருக்காக காத்திருந்தான். தன் மகன் தன் கண்முன் படும் வேதனையை தாங்க முடியாமல் தவித்த வேளையில், ஆண்டவரே தன் ஒரே நம்பிக்கை என்று அவருக்காக காத்திருந்தவன், அவரைக் கண்ட உடனே கூறிய வார்த்தையை தான் நாம் **(மாற்கு 9:22)** இல் கண்டோம்.

இங்கு தன் மகன் படும் வேதனையில் இருந்து எப்படியாவது விடுதலை பெற வேண்டும் என்ற உறுதியுடன், அதே நேரத்தில் அதை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதை அறியாதவனாய், ஆண்டவருடைய சீஷர்கள் முதற்கொண்டு உதவி செய்ய முடியாமல் போன சூழ்நிலையில், ஆண்டவரே தன் இறுதி நம்பிக்கை என்ற நிலையில், "**நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்**" என்று சர்வ வல்லமையுள்ளவரிடத்திலேயே கேட்கிறான். ஆம், ஒருவேளை இந்த வெளிச்சம் அவனுக்கு இல்லாவிட்டாலும், ஆண்டவர் விசுவாசத்தை பற்றி கூறிய பொழுது "**விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்**" **(மாற்கு 9:24).** இங்கு என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கூறுவதில் இருந்து, அந்த விசுவாசத்திற்கு காரண கர்த்தா ஆண்டவர் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். மேலும் "**கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்**" என்பது அவனது இருதயத்தில் இருந்த வேதனையின் வெளிப்பாடாகும். இங்கு அந்த தகப்பன் ஆண்டவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்ற மறுரூப மலையின் வெளிப்பாட்டை பெறாவிட்டாலும், ஆண்டவர் ஏதாவது

செய்வார் என்ற விசுவாசத்துடன், ஆண்டவரிடத்தில் வந்தான். ஒருவேளை அந்த விசுவாசத்தில் ஏதாகிலும் குறை இருக்குமானால் அதையும் ஆண்டவரே நீக்கி அருள வேண்டும் என்று கூறுவதில் இருந்து, விசுவாசத்திற்கு அவரே காரண கர்த்தா என்பதை வெளிப்படுத்துகிறான். ஆண்டவர் அந்த தகப்பனுடைய வேதனையை கண்ணோக்கி பார்த்தார், அவன் மகனை பற்றி கனிவாய் விசாரித்தார், அவன் மகனை அலைக்கழித்த பிசாசை துரத்தினார். இறுதியில், செத்தவன் போல் தரையில் கிடந்த அந்த வாலிபனை, ஆண்டவராகிய இயேசுவே அவன் கையை பிடித்து, அவனை தூக்கிவிட்டு, தகப்பனிடத்தில் ஒப்படைத்தார். அந்த தகப்பன தன் மகனை அழைத்துக்கொண்டு எத்தனை மகிழ்ச்சியோடு, நன்றி உணர்வோடு, ஆண்டவரே மெய்யான தெய்வம் என்ற சத்திய தெளிவோடும் சென்றிருப்பான். ஆண்டவருடைய சிஷர்கள் கூட பெறாத அனுபவத்தை இந்த தகப்பன் பெற்றுக்கொண்டான். அதற்கு காரணம் "**நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்**" என்ற அந்த கடுகு விதை அளவு விசுவாசமே ஆகும்.

ஆம், இன்று எத்தனையோ ஆண்டுகள் சபையில் அங்கத்தினராய் இருந்தும், பலவித ஊழியப் பாதைகளில் பங்கெடுத்தும், ஆண்டவரால் சிறு வயதிலிருந்தே வழிநடத்தப்படும் அனுபவத்தை பெற்றிருந்தும், இக்கட்டான சூழ்நிலையில் ஆண்டவர் ஏதாவது செய்வார் என்ற நம்பிக்கை அற்றவராய் அப்போஸ்தலர்கள் போல வாழ்வோரே பலர். அதனால் தான் 5 அப்பங்களை 5000 பேருக்கு பங்கிட்டபொழுதிலும், 7 அப்பங்களை 4000 பேருக்கு பங்கிட்ட பொழுதிலும், தங்களுக்கு அப்பங்கள் இல்லையே என்று எண்ண தோன்றின அப்போஸ்தலர் போல் இன்றும் பலர் உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் ஆண்டவரை குறித்து அதிகம் அறிந்திராதவராய், இருளுக்குள்ளாய், பிசாசின் பிடிக்குள்ளாய் வாழ்ந்து கொண்டிருப்போர், ஆண்டவரிடத்தில் வரும்போதும், அவர் ஏதாகிலும் செய்வார் என்று விசுவாசிக்கும் பொழுதும், மேன்மையான அனுபவத்தை, விடுதலையை பெற்றுக்கொள்கின்றனர். இப்படிப்பட்டவர்களே ஆண்டவருக்காய் வல்லமையாய் எழும்பி பிரகாசிக்கவும் செய்கின்றனர். இதனை நாம் இன்று ஆண்டவருக்காக வல்லமையாய் ஊழியம் செய்யும் பலரது அனுபவ சாட்சியாக கேட்கலாம்.

இதற்கு ஒரு சிறந்த உதாரணம் அப்போஸ்தலர் பவுல் ஆகும். ஆண்டவரோடு மூன்றரை வருடம் இருந்து அவர் மூலமாய் ஊழிய பாதையில் நடத்தப்பட்டு, அவர் பாடு மரணம் உயிர்த்தெழுதல் என அனைத்து அனுபவங்களையும் பெற்ற அப்போஸ்தலர்களை காட்டிலும், ஆண்டவருக்கு எதிராக இருந்து, ஆண்டவருடைய பிள்ளைகளை துன்பப்படுத்தி, கொலை செய்வதற்கு உறுதுணையாக இருந்த பவுலை, அப்போஸ்தலராக தேர்ந்தெடுத்து, அவரை புதிய ஏற்பாடு வேதாகமத்தில் பாதிக்கும் மேல் எழுதும்படியாய், தேவன் அவருக்கு கிருபை பாராட்டினார். ஆண்டவரோடு கூட இருந்த அப்போஸ்தலராகிய பேதுருவே, அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆண்டவர் அளித்த வெளிப்பாட்டை புரிந்து கொள்ள அரிதாய் இருகிறது என்று கூறும் அளவிற்கு **(2 பேதுரு 3:15,16)**, அவரை ஊழிய பாதையில் உயர்த்தி வைத்தார். எனவே ஆண்டவர், நம்மிடத்திலும் எதிர்பார்ப்பது அந்த தகப்பனை போல, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும், சிறிதானாலும், பெரிதானாலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களானாலும், பூமிக்குரிய நன்மைகளானாலும், ஆண்டவர்

நமக்காக ஏதாவது செய்வார் என்ற சிறிய கடுகு விதை அளவு விசுவாசம் மட்டுமே, தகப்பன் தனக்காக ஏதாவது செய்வார் என்று விசுவாசிக்கிற சிறுபிள்ளை போல, நம் வாழ்க்கை இருக்குமானால், ஆண்டவர் நிச்சயம் நம்மையும் விசாரிப்பார், நம் அவிசுவாசம் நீங்க உதவி செய்வார், சூழ்நிலை எதுவானாலும், தேவை எதுவானாலும், நிச்சயம் நமக்கு விடுதலையை, வெற்றியை தருவார். ஆமென், அல்லேலூயா.